உ

கடவுள் துணை.

ஸ்ரீ நாரூர் சபாபதி பத்தன்

# கொலை அலங்காரம்.



சி. அண்ணாமலைமுதலியாரா லியற்றப்பட்டு,

திருமணவூர்.

முனிசாமிமுதலியாரால்

ஆ-இரத்தினவேலுமுதலியாரது
வாணீவிலாஸ அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

1898.

உ

கடவுள் துணை.

நாகூர் சபாபதிபத்தன்,

# கொலை அலங்காரம்.

விநாயகர் துதி.

சத்திவிநாயகனே சபாபதிபத்தன்கதை
முற்றிலுநானுரைக்குமுன்னிருந்துகாருமையா
அலங்காரம்—சத்திமைந்தன் பாதப்போற்றி
சண்டைசெய்த கதையைச்சாற்றி
குஸ்திசெய்தோர் பட்டகீர்த்தி
கூறிடுவேன் கேளுநேர்த்தி
ஐயா—டஸ்துமுதலில் புழங்கச்சொல்லும்
மாதாபிதாவை யடிக்கச்சொல்லும்
கத்தியைகையி லெடுக்கச்சொல்லும்
கண்டபேர்களை வதைக்கச்சொல்லும்
ஐயா—இத்தனைத்துன்பத்தை செய்யச்சொல்லும்
இன்னமுமவர்மத்தை நினைக்கச்சொல்லும் நன்
தெம்மாங்கு-தேசத்திலனேககொலை செய்தவராக்கேள்வியுண்டு
வாசம்புகழ்நாகூரிலே வன்கொலையைக்கேளுமையா நன்
அலங்கார—விஸ்வகுலத்தில் பிறந்தபாலன்
வீரன்சபாபதியென்னும்பேரான்
கல்பாமுழுதும் தெரிந்ததீரன்
கல்லைப்போன்ற மனதுக்காரன்
ஐயா—குங்குமம்போலே குளிர்ந்தமுகத்தன்
குயிலைப்போலே வார்த்தைக்காரன்
மங்கையர்க்கேற்ற மார்புக்காரன்
மதனைப்போல வடிவுக்காரன்
ஐயா—தலையிலிப்படி விதித்திருக்கு
தவிராதடி பிரமன்கிறுக்கு
தெம்-குத்துசண்டை குஸ்திகளும் கோல்கத்தி கோப்படாவும்
கற்றிருக்கும்வீரரெல்லாம் காட்டவாசபாபதிமேல். நன்
ஐயா—நாகூர்முழுதும் சொல்லிக்கொண்டு
நாலைந்துபேர்களாய்க் கூடிக்கொண்டு
கள்ளுசாராயத்தைக்குடித்துக்கொண்டு
காளாட்டிபயல்களை சேர்த்துக்கொண்டு
ஐயா—பள்ளுப்பயலை யடித்துக்கொண்டு
பாவிகபடாய் நினைத்துக்கொண்டு

சொல்லுக்குமீறி நடந்துக்கொண்டு
துரோகிப்பயலு மிருந்துச்சொல்லி
ஐயா—தன்னைத்தானேபுகழ்ந்துக்கொண்டு
தானேவீரனென்றிருக்குநாளில் (நன்)

தெம்—அடுத்தவிட்டுமங்கையரும் அன்னமதுவீதில்வைக்க
கடுகடுத்துநாய்களெல்லாங்கலகமதுசெய்யுதையா (நன்)

ஐயா—நாய்களெல்லாம் சண்டைகொடுக்க
நாடியிரைச்ச லதிகமெடுக்க
ஒய்நதுசிலது ஓட்டமெடுக்க
ஒரங்கியிரங்கசாமிவிழிக்க

ஐயா—வித்தசிரிக்கிகள் நாய்கள்குலைக்க
வேசிசிரிக்கிசாதம்வைக்க
கத்துமிரைச்சல் காதடைக்க
காமாட்டிசிரிக்கி நாய்கள்குலைக்க

ஐயா—சண்டிசிரிக்கிகள்போலேதொண்டைகள்
சவங்கசிரிக்கியாகவாயகள் (நன்)

தெ-புண்ணியங்தேடியல்லோ போசனங்கள்வைத்தோமம்மா
பண்ணபுண்ணியம்கைமேலேதான்பலித்ததடிமீனாட்சியே

ஐயா—சின்னகாமாட்சிசேதியைகேட்டையா
சிறிக்கிபயலின்கொழுப்பைப்பார்த்தையா
ஒருநாயிக்கினான்சாதம்போட
ஒன்பதுநாய்கள்சண்டையாட

ஐயா—நாய்களிரைச்சல்காதில்கேட்கவே
பேய்பயல்களைவிழிக்கசொன்னமோ
பின்னுங்கம்மாளஜாதிகெருவமா
வைபிரவாயிலேபுழுவுந்தள்ளாதா
பையவேகாளிகொண்டுபோகாதா (நன்)

தெம்-மங்கையருமிவ்விதமாய் மனதுநொந்துவார்த்தைசொல்ல
அங்கமீதுமாரியம்மன் அடுத்தபோது அடித்திட்டானே.()

ஐயா—தன்னையடித்துதங்கையைபிடித்து
தமையன்மார்களையெட்டியுதைத்து
அன்னையடித்துதந்தையடித்து
அத்தைமதனிமாமியடித்து

ஐயா—விடுமுழுதும்யிரைச்சலெடுக்க
வீதிநூலும்கூட்டம்நெருங்க
வாடிமனதுசோபங்கோர்த்து
வன்னைதந்தைமூர்ச்சையடுத்து

ஐயா—புரண்டுஅழுதார்புத்தியைகலைத்தார்
உருண்டுஅழுதார்ஓசைவிடுத்தார்

தெம்-இத்தனை அடிப்பும்பட்டு இணைபிரியாதிருக்கருந்து
மற்றொருவர்காணாமலே மன்னவனும்ஸ்டேஷன்சேர்ந்தான்
ஐயா—போலீஸ்டேஷன்போயிசேர்ந்து
புண்ணியஜவானைகூப்பிட்டுப்பார்த்து
சிக்கிலேநானிருக்கும்போது
திருட்டுப்பயல்கள்வீட்டில்வந்து
ஐயா—கம்பிதடிகளைகொண்டுவந்தார்
கண்டபடியெல்லாமடித்துப்போட்டார்
தங்கையமுழுவதையெட்டிப்பார்த்தார்
தைரியமாககன்னத்திலடித்தார
ஐயா—அடித்துவிட்டுசென்றாரையா
ஆத்திரத்தால்வந்தேனையா (நன்)
தெம்-நல்லவன்போலேநீயும்நாயங்களைசொல்லவந்தாய்
நின்றிருமுன்மனக்கவலேநிவர்த்திசெய்கிறேமென்றுரைத்தார்
ஐயா—கேட்டுமனதுசலித்தானையா
கிருகிருவென்றிவன்வந்தானையா
ஓட்டமாகவேவாடினானையா
ஒருநொடியிலேசேர்ந்தானையா
ஐயா—சின்னமரக்காரைகண்டானையா
சேதிவிபரத்தைதவிண்டானையா
என்னுடவார்த்தையைகேளடாநீ
யிப்பவேசமமன்செய்யடாநீ
ஐயா—சர்க்கார்கூப்பிட்டால்வாரேன்போடா
சாட்சிவிண்டாச்சொல்லுரேன்டா (நன்)
தெம்-கடைவீதிவுள்ளவரேகணக்கெழுதப்வர்த்தகரே
மடையனென்சாட்சிபோடுறேன்பன துவச்சொல்லவேணும்
ஐயா—காணாசேதிசொல்லவேண்டாம்
கண்ணில்கண்டதைகூறவேண்டும்
வீணாய்பாவந்தேடவேண்டாம்
விருதாவிலேகெடுக்கவேண்டாம்
ஐயா—என்னைப்போலபிறப்புயிருக்கும்
யேழைமீதில்கிருபைதொடுக்கும்
பன்னிபன்னிஞன்சொல்லக்கடுக்கும்
பாலன்மீதிலேவருமம்விடுக்கும்
ஐயா—இதுதான்சேதிசொல்லவந்தேன்
இனிமேலொன்றுமில்லமாட்டேன் (நன்)
தெம்-சாந்தகுணமுடையசபாபதியேசொல்லுகிறேம்
அடுத்தாபபோலிருந்தவளா அழைத்துவைத்துகேளுமையா.
ஐயா—கண்ணாலென்றுங்கண்டதில்லை
காணவார்த்தைவிண்டதில்லை (நன்)

தெம்-நீதியநீதிகளைநித்தமவர் தானருந்து
வாதிக்கையேயோட்டிவைக்கும்வண்மைகச்சேரிதான்புகுந்து.
ஐயா—கச்சேரிதனிலேபுகுந்துக்கொண்டு
கலகந்தனையேசொல்லிக்கொண்டு
அச்சமில்லாசம்மன்வாங்கிக்கொண்டு
அவர்விரோதிக்குநீட்டிக்கொண்டு
ஐயா—கோட்டாரவாகள் குறித்ததேதிலே
கும்பலாயவர் போகும்போதிலே
பார்த்துதுரைகள் கூப்பிடும்போதிலே
பலபலவாய் சொல்லும்போதிலே
ஐயா—சாட்சியில்லாமல் தள்ளிபோட்டான்
சலித்துமனது ஒய்ந்துவிட்டான். (நன)

நொண்டிச்சிந்து.

பதினைந்து ரூபாயெடுத்தான் - தங்கைதனை - பக்கத்திலேக்குந் தவைத்து நீதியுரைத்தான் மதியுடன் கடையடுத்தான் இவனுக்கு மனம்போன சரக்கெல்லாம்வாங்கிக்கொண்டான் விசையுடன்வீடடுத்தான் இவர்களை விரைவிகிலெல்லவனைவுரங்கசொன்னன் தோல்போட்டகத்தியெடுத்தான் யென்னையுன்னை தூக்கிப்போட்டு அடித்திட்ட பாவியுயிரை பீறியயிரவுக்குள்ளே பிணங்களை மேடாகயெல்லவனை சேர்க்குறேன்பார் யென்றுசொல்லி தங்கையிடத்தில் வட்டேனே யெழுந்துவெளியில்வந்து மணிபார்த்தான் யெட்டுமணியென்றுமதித்து சபாபதி யேங்கியிருக்கும்போது ஆயர்பாடியில் கண்ணன்வந்துவுதித்தாற்போல் கோவிந்தனும் கருத்தை தவிலேறித்தி ஆசானைக்கண்டு இன்னமென்ன தாமதமென்றான் இருவரும் யெழுந்துநடந்துமவர் சிரித்துக்கொண்டு புகுந்தார்கடைவீதியில் யிந்த பூமியொடு அண்டரண்டம் வெடித்ததுபோல் பளபளபளவென்று தலைகளை பரக்கடித்தான்வுயிர்மரக்கடித்தான் கரகரகரவென்று நாராயணன் கரத்தின்சக்கரம்போல அறுத்தெறிந்தான் படபடபடவென்று வீமன் பிடித்த கதையில்பட்டரணக்களம்போல் சடசடசடவென்று ராவணன் சண்டையிலே மூலபலம்வுருண்டதுபோல் குத்திகுத்திகுவித்துவிட்டான் வூரெங்கும் இரத்தவெள்ளங்கண்டல்லவோ சிரித்துக்கொண்டான் எமனிடபதிசேர்த்தான் சிலரை யேங்கியிருக்கும்படி செய்துவிட்டான் வாங்கினன் ஓட்டத்திலே இவன் வந்தவழிபோனவழி தெரியவில்லை. (தந்தின)

கும்மிப்பாட்டு.

கும்மியடிபெண்கள்கும்மியடி-மனக் குறைகள்நீங்கவேகும்மியடி நம்மையாளுகாருண்ய ஆண்டவர்பாதத்தை நாடியேசொல்லியடியுங்கடி. (க)

சொல்லிகவேனசாடிபோற்றியெழில் சூதனிக்கொங்கைகுடத் தனங்கே பொல்லாதபாவிசபாபதிகதைதக்கி போரூர்முருகனுங் காபபாமே. (௨.)

ஆறுமுகவனுமுன்னிருக்கக்கலை அம்பிகைவாணியென்னுவிருக்க நூதருக்கஞ்சாதசபாதிகதையை கோதையேநீங்களும்சொல்லுங்கடி. (௩.)

சொல்லவளந்திகழ்தஞ்சாவூர் ஜில்லா சூழும்நாகப்பட்டணந் தாலூக்கா பல்லவரும்புகழ்நாகூர்தன்னிலே பாவிசெய்தகுலைகேளுங்கடி. ௪

சேழ்க்கவேசொல்வேன்மன்மதனூ வைகாசியாம்பதினுலே தான் சூழுங்கருக்கல்இரவில்புகுந்தவன் செய்தபெருங்கொலைகழறுகிறேன். ௫

கம்மாளசாதியென்றேயுரைப்பாரவன் காரணநாமுமறியேண்டிமிக்க உலகத்தில்சபாபதியென்றுமே மெத்தவுங்கேள்வியாம் பெண்ணரசே, ௬

பெண்ணரசேயிந்தப்பாவிக்கதையின் பெருமைசற்றுவிளங்கிவிட்டு பண்ணவிபரீதகோலமுனைத்திடப் பத்தினியேசெவிசாற்றிடுவாய். ௭

சாற்றிடக்கேளும் சபாபதிபத்தனில் தன்பிரவிமூன்று பேர்களிலே நாத்தூக்குடையவிப் பாவியிவனுடன்தோகையொருத்தி ஓர் தங்கையுண்டாம் ௮

தங்கையைத்தள்ளியடித்தாரென்று யிந்ததளிதலைப்பாவிசபாபதியும் மங்கையைக்கொல்லா குறையைக்கொண்டுமறு மன்னறைக்குத்தத்துணிந்தாண்டி ௯

துணிந்தவிரோதிவருங்குரியது தோதாய்சமயமதைப்பார்த்து கனிந்தமாங்கனிவிழும்போலேதலை கத்தியால்குத்தினான் நாகைபெண்ணே. ௰

கத்தியால்குத்திதள்ளுரதும்பாவி கம்புனல்மாரியடிக்கிறதும் தத்தித்தடுமாறிவிழுகிறதும்வுயிர் தானேஎமலோகம்போகிறது போகிறஉயிர்விளிக்கிறதுமது பூமியைப்பார்த்துமழுகிறதும் வாகுடன்காலையுதைக்கிறதும்பார்த்து வையகம்சொல்லுறார்நங்கையர்கள். ௧௧

நாகூர்மனிதரேகேளும்பிள்ளா யிந்த நரபொலிசெய்ததைபாரும்பிள்ளாய் சாகுறுரென்றுதெரியாமலிவன் ஜாடினுன்கத்தியால்ஆனவரை, ௧௨

ஆதியில்தேசிங்குயுத்தத்திலேபெண்ணே அன்பனுமோவுத்துக்காரனுமே பாதிக்கதையில் வுயிர்கொடுத்தானென்று பாவலர் சொல்லியிருக்கிறுர்கள்.

சொல்லியிருப்பதை கேட்டிருப்போமையா சுருதிமொழியிலும் பார்த்திருப்போம் அல்லலில்லாதசபாபதிக்குத்துணை ஆனந்தகோவிந்தன்சேர்ந்தாண்டி, ௧௫

கோவிந்தனென்றுமே பேரைவைத்துக்கொண்டுகொலைகளைச் செய்யவேயெத்தனித்து பாவிப்பயல்கள் யிருவருங்கூடியே படு கொலைசெய்தாரேநாகைபெண்ணே. கசு

சேதிவிபரத்தைகேளுங்கடி யதன் சித்தவுருதிலைப்பாருங்கடி நீதியநீதிவிளங்குவுலகத்தில வினைவாய்நீங்களுங்கேளுங்கடி, கஎ

வேறு மெட்டு

ஆண்-குத்துபட்டிறந்தவர்கள்கேளடி பெண்ணே
கூறுகிறேன்யானுமிதைப்பாரடி கண்ணே
பத்துரூபாசுருட்டுவிற்கும்கோவிந்தன் பெண்ணே
பரமபதிசேர்ந்தானடிநாகையின் கண்ணே
பெண்-யென்னமாககுத்தினானேயெந்தன் கணவா
யெடுத்துரைக்கவேணுமையாயெந்தன் கணவா
முன்னமவனைசெய்தகுற்றமென்ன கணவா
முடிந்ததிங்கேவினையாவந்துசொல்லும் கணவா
ஆண்-தங்கையையடித்தானென்றுகேளடி பெண்ணே
தன்னைவந்துவுதைத்தானென்றுபாரடி கண்ணே
மங்கையினால்கொலைசெய்யகேளடி பெண்ணே
மனந்துணிந்துருதாசெட்டியையடித்தானே கண்ணே
பெண்-தந்தைக்கிதலைமகனாய்யெந்தன் கணவா
தருமத்திற்சிறந்தவனாமெந்தன் கணவா
சநதைகொள்ளைக்காரனைப்போலெந்தன் கணவா
சாய்த்தானேநடேசனையும்யெந்தன் கணவா
ஆண்-அறியாதசிறுவனடிகேளடி பெண்ணே
அழகில்மிகுந்தவனடிபாரடி கண்ணே
வரிசையாம்கடையடைத்துகேளடி பெண்ணே
வருகுமுன்னேசிரங்கத்தைவதைத்தானே கண்ணே
பெண்-ஆண்டவனைவேண்டிக்கொண்டுயெந்தன் கணவா
அபினிவிற்கும்சுப்ரமணியன்யெந்தன் கணவா
தீண்டாமலேவருகும்போதுயெந்தன் கணவா
திரும்புமுன்னேகுத்தினானேயெந்தன் கணவா
ஆண்-பதினாருமாசமாச்சுகேளடி பெண்ணே
பாலிங்கசாமியடிபாரடி கண்ணே
விதியிருந்துகலியாணம்செய்தாரே பெண்ணே
சதியாகயெமனிடம்சேர்த்தாரே கண்ணே

கும்மி.

ஆறுபேருக்கும்வுயிர்நீங்கியவர்மூச்சுமில்லாமல்தரையோங்கிநாவுமெழாமலிருக்கையிலேபார்நங்கையேபோலீசார்கண்டனராம்

கங்குலிலிந்தப்படிநடக்கமறு காலைபதினைந்தாந்தேதியிலேசங்கையற்றபகல் பத்துமணிக்கெல்லாம் சர்க்கார்கண்டு பிடித்தனராம் உக

# கொலை அலங்காரம்.

கொண்டுநடந்துடன் ஆள்பத்திரிதன்னின் கூட்டமாகபெருங்காட்சியுடன் கண்டுவெகுடாக்டர்மார்களிலேசிலர் கார்த்துப்பிரையாசைப்பட்டனராம். ௨௭

கண்டுமவனைப்பிடிக்கும்படிவெகு கானிஸ்டேபில்மேயட்டுஆனவரை கொண்டுவிடுத்து பிடித்துக்கொண்டபின்னே கோரத்தைக்கேளடிபெண்மயிலே. ௨௮

கட்டிப்பிடித்துடன் நெட்டிக்கொண்டவனை கானிஸ்டேபில்யிகில்பெக்டருடன் நெட்டிஜெயிலிலடைத்துப்பின்னால்விண்ட நீதிவ்யகேளடிபெண்ணரசே. ௨௯

பெண்ணரசேயிவன்வாக்குமூலங்களை பார்க்கவுங்கேட்கவுங்கூடலையும் எண்ணவொண்ணுதஜனத்திரளைநான் யெத்தனையென்றுவுரைப்பேண்டி. ௩௰

வாககுமூலத்துடன்சேதிகேட்கயங்கே வந்தபெருஞ்சனக்கூட்டமெல்லாம் நோக்கவும்நெஞ்சுநடுங்கியவர் விற்கபயந்து நடந்தனரே. ௩௧

நடக்கும்விபரீதகூட்டத்திலேசற்றும் நாணமில்லாமல் படுபாவிகொடுக்கும்வாக்குமூலம் கேட்டமட்டாகிலும்கோதையே சொல்லமனநடுங்கும். ௩௨

தான்செய்தகுற்றத்தை ஒப்புக்கொண்ட அந்தபிரியமுள்ளசபாபதியை வீணும்பலபலயோசனைசெய்யாமல் வைத்தார்செயிலிலேகாவலுடன், ௩௩

வாக்குமூலங்களைகேட்டுக்கொண்டவுடன் வரிசையாயசாட்சி ருசுப்படித்தி தீர்ப்புகள்செய்திட சட்டமெழுதியேசெஷன்கட்கு யேகசெய்துவிட்டார், ௩௪

நாகப்பட்டணத்தின்பாதையிலேயந்த தேதியிலேகொண்டுபோகையிலே சாகப்போறவன்முகம்பார்த்துசெனம் சரியாயிருகோடி நாகைப்பெண்ணே ௩௫

பிரமனெழுத்துவலுவாலேஇரங்க சாமிக்கிசாட்சிசொல்லாதாலே தர்மமாய்ஜட்ஜியும் பார்த்துபிசகென்றுதள்ளினார்பாரடி நாகைப்பெண்ணே, ௩௬

ஆயிரத்தெண்ணூத்தி தொண்ணூத்தியைந்தினில் ஆனதோர்நவம்பர்மாதத்திலேநேயமாய்பதினெட்டாந்தேதியிலுயிர் வாங்கினார்பாரடி நாகைப்பெண்ணே, ௩௭

நங்கையேபெண்ணே யிந்தமன்மதவருடம் நலமான கார்த்திகைமாதத்திலே பங்கமுடன்நாலாந்தேதியிலேதிங்கள் பகலில்வாங்கினாரிருவரையும், ௩௮

ஆவுக்குபில்லைகொடுத்தாலுமது அற்புதபாலைக்கொடுக்கும்டிமேவியபாம்புக்கு பாலைக்கொடுத்தாலும் மெள்ளவிஷந்தரும்நாகைப்பெண்ணே. ௩௯

கொலை அலங்காரம்-முற்றிற்று.

——(o)——